(ஆ) திருப்பூர் பின்னலாடைத் தொழில் பாதிப்பு

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; (குறுக்கீடுகள்) இன்று இந்தியாவிற்கு அதிக அளவு அந்நியச் செலாவணியை, வருவாயை ஈட்டித் தரக்கூடிய திருப்பூர் பின்னலாடைத் தொழிலுக்கு மிகப் பெரிய பாதிப்பு, சோதனை ஏற்பட்டிருக்கிறது. எல்லா அரசியல் கட்சிகளின சார்பிலும் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறோம். முக்கியமான பிரச்சினை, அதை எடுத்து விவாதித்தால் பொருத்தமாக இருக்குமென்று நினைக்கிறோம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு மணி. (குறுக்கீடு)

திரு. ஜி.கே. மணி: திருப்பூர் பின்னலாடைத் தொழில் பிரச்சினை, மிகப் பெரிய சோதனை. எல்லா அரசியல் கட்சிகளின் சார்பிலும் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறோம். (குறுக்கீடுகள்) முக்கியமான பிரச்சினை. (குறுக்கீடு) இது 5 இலட்சம் பேர் வாழ்க்கைப் பிரச்சினை. (குறுகீடு) இந்தப் பின்னலாடைத் தொழில் 5 இலட்சம் பேருடைய வாழ்க்கைப் பிரச்சினை. இந்தியாவுக்கு அதிகமாக வருவாயை ஈட்டித் தரக்கூடிய தொழிலுக்குப் பிரச்சினை. இந்தப் பிரச்சினையைக் குறித்து எலலா அரசியல் கட்சிகளும் அறிவிப்புகள் கொடுத்திருக்கிறோம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கொடுத்திருப்பது சம்பந்தமான அறிக்கை கேட்டிருக்கிறோம். பதில வரவில்லை. பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்வோம். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) No, we are entering into other business. உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). (குறுக்கீடுகள்) 2007 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும"

எனக் கோருகிறேன்.